# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,149 — 1960 ජූනි 24 වැනි සිකුරාදා — 24.6.1960

12,149 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | 152 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 149 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணவிதம் .. .. .. | 154 |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### இலங்கை அரச விமானப்படை இலாகா

இலங்கை அரச விமானப் படையினருக்குப் பின்வரும் சாமான்களை 1960/61 ம் ஆண்டில் வினியோகிப்பதற்கும், சேவைகளைச் செய்வதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், கொழும்பு பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஒப்பந்தக் கேள்விச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு யூலை மாதம் 14 ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை அனுப்புவோர், கொழும்பு விமானப்படைத் தலைமைக் காரியாலயத்திலுள்ள கணக்காளரிடம் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கொழும்பு பாதுகாப்பு வெளிநாட்டலுவல் காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு யூலை மாதம் 14 ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு விண்ணப்பப் பத்திரங்கள் பரிசீலனை செய்யப்படும். அப்பொழுது ஒப்பந்தக்காரர்கள் பிரசன்னமாய் இருக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| A. | இறைச்சி .. .. | கொழும்பு, | கட்டுநாயகா, தியத்தலாவை, சீனக்குடா |
| B. | மீனும் கருவாடும் .. | ஷை | ஷை |
| C. | பாற் பண்ணைப்பொருட்கள் .. | ஷை | ஷை |
| D. | பாண் .. .. | ஷை | ஷை |
| E. | மரக்கறிவகைகள் .. | ஷை | ஷை |
| F. | உள்ளூர் காலைப் போசனப் பண்டங்கள் | ஷை | ஷை |
| G. | அரிசி, கறிப்பொருளும், தானிய வகைகளும் | ஷை | ஷை |
| H. | ஆசுப்பத்திரி வசதிகள் .. | ஷை | ஷை |
| J. | கொத்திக் காய்ந்த விறகு வழங்குதல் | ஷை | ஷை |
| K. | அணியுடைகளும் மற்றைய துணிகளும் சலவைசெய்தல் | ஷை | ஷை |

L. அணியுடைகளைத் தைத்தலும் மாற்றியமைத்தலும் நிர். 1 எம். யூ., கட்டுநாயகா

M. பழுதடைந்த " ரயர்களைத் " திருத்தல் நிர். 1 எம். யூ., கட்டுநாயகா

N. கம்பளங்களும் குசன் உறைகளும் " றைக்கிளீனிங் " செய்தல் நிர். 1 எம். யூ., கட்டுநாயகா

O. மெத்தைகளையும் குசன்களையும் தலையணைகளையும் திருத்தி அமைத்தல் கொழும்பு, நிர். 1 எம். யூ., தியத்தலாவை

ஜே. எல். பாக்கர்,
ஏயர் வைஸ் மார்ஷல்,
விமானப்படை ஆணைத்தலைவர்,

### மதுவரி இலாகா

#### சாராயமும் மற்றும் பொருட்களும் கொண்டு செல்லுதல்

1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு கீழ்க் கண்ட இடங்களிடையே சாராயமும் மற்றும் பொருட்களும் கொண்டு செல்வதற்கு கண்டியிலுள்ள மத்திய பகுதி உதவி மதுவரி அதிகாரி 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 27 ம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்வார் :—

(i) திருகோணமலை புகையிரத ஸ்தானத்திற்கும் திருகோணமலை " ஓர் " மலையிலுள்ள சாராயக் குதத்திற்கும் ;

(ii) மட்டக்களப்பில் உள்ள புகையிரதஸ்தானத்திற்கும் மட்டக்களப்பு சாராயக் குதத்திற்கும் ;

2. பத்து ரூபாய்க்கு கச்சேரி ரசீது பெற்றுக்கொண்டு, அதைக்கண்டியிலுள்ள மத்திய பகுதி உதவி மதுவரி அதிகாரியிடம் காண்பித்து அவரிடமிருந்து பெறும் கேள்விப் பத்திரங்களில் விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

3. இது சம்பந்தமான வேறு தகவல்களை மத்திய பகுதி உதவி மதுவரி அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ரி. பீ. வடுகொடபிற்றியா,
மதுவரி அதிகாரி.

மதுவரி அதிகாரியின் கந்தோர்,
கொழும்பு, 1960 ம் ஞூ ஆனி மீ 15 ந் வ.

---

### உள்ளூராட்சிப் பகுதி

#### நீர் வழங்குந்திட்டம்—கரவெட்டி

யாழ்ப்பாணம் மாவட்டத்து கட்டைவேலிக் கிராமச் சங்கத்தில், கரவெட்டிக்கு குழாய்த் தண்ணீர் வழங்கும் திட்டமொன்றை நிறுவுவதற்கான முத்திரையிட்ட கேள்விப் பத்திரங்கள், இணைப் பிரதிகளாக, 1960 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை கொழும்பு வைட்எவேய்ஸ் கட்டிடத்திலுள்ள உள்ளூராட்சி அமைச்சுக் கேள்விச் சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கொழும்பு பழைய செக்ரடேரியட்டின் 267 ஆம் இலக்க அறையிலிருக்கும் உள்ளூராட்சிப் பகுதியிலேனும், கொழும்புக்கு வெளியேயுள்ள எக் கச்சேரியிலேனும் ரூபா 250 கட்டுப்பணம் கட்டிய பற்றுச்சீட்டொன்றைக் காட்டி கொழும்பு பழைய செக்ரடேரியட்டிலுள்ள உள்ளூராட்சி அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில் கேள்விகளைச்சமர்ப்பிக்க வேண்டும். கேள்விகளை அனுப்பும் உறையின் மேற்பக்க இடக்கை மூலையில் " கரவெட்டி நீர்வழங்கும் திட்டத்துக்கான கேள்வி " எனக்குறித்தல் வேண்டும்.

3. பொதுவேலைப் பகுதியில் ரூபா 300,000 க்கு மேற்பட்ட நீர்க்கரும, வடிகால் வேலைகளுக்குப் பதிவு பெற்றிருப்போருக்கு, அப்பதிவுக்கான சான்று சமர்ப்பிக்கப்படுங்கால், 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கொழும்பிலுள்ள ஒப்பந்தக்காரர் அவர்களின் கேள்விகளை உறையிலிட்டுப் பதிவு செய்து அனுப்ப விரும்பாவிடின், அவர்களேனும், அவர்களின் பிரதிநிதிகளேனும் முத்திரையிட்ட கேள்வியை உரிய திகதிக்கும் நேரத்துக்கும் முன்னர், கேள்விகளைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் கொழும்பிலுள்ள உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சின் உதவிச் செயலாளரிடம் நேரில் கொடுக்க வேண்டும்.

4. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் காலம் முடியும் திகதியிலிருந்து 6 வாரகாலத்துக்கு, கேள்விக்காரர்கள், அவர்களின் கேள்விகளை அப்படியே விட்டுவைக்கவேண்டும்.

5. 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு அமைச்சின் காரியாலயத்தில் கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருக்கலாம்.

6. செய்யவேண்டிய வேலைபற்றிய விபரங்களையும், தகவல்களையும் (பொது விடுமுறைநாட்கள் தவிர்ந்த), எத்தினத்திலேனும் காலை 9 மணிக்கும் பிற்பகல் 4.30 மணிக்குமிடையிலும், சனிக்கிழமைகளில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரையிலும் உள்ளூராட்சிப் பகுதி நீர்க்கரும இஞ்சினியருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

வி. சி. ஜயசூரியா,
பதில் உள்ளூராட்சி அதிகாரி.

கொழும்பு,
1960 ௵ ஜூன் ௴ 20 ந் உ.

---

## பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி—கண்டி மாவட்டம்

### 1960/1961 ம் வருடத்திற்கு உணவுப்பண்டகசாலைகளுக்கு சேவைசெய்ய ரெண்டர்கள்

1960 ம் வருடம் அக்டோபர் மாதம் 1 ம் திகதி முதல் 1961 ம் வருடம் செப்டம்பர் மாதம் 30 ம் திகதி வரை கண்டி மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட உணவுப்பண்டகசாலைகளுக்கு உணவுப்பொருள்களும் மற்றைய ஏனையபொருட்களும் ஏற்றிச்செல்ல ரெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கண்டி, கடுகாஸ்தோட்டை, வத்துகாமம், கம்பளை, நாவலப்பிட்டி, கற்றன், கடுகன்னுவை, குண்டசாலை.

கண்டிப்பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பஞ்செய்து பெற்றுக்கொண்ட பாரத்திலேயே எல்லா ரெண்டர்களையும் இரட்டையாகச் சமர்ப்பிக்கவேண்டும். எல்லாப் பண்டகசாலைகளும் ஒவ்வொன்றுக்கும் ரூபா 250 வீதம் கண்டிக் கச்சேரியில் கட்டுப்பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட ரசீதைச்சமர்ப்பித்தே ரெண்டர்களுக்குரிய பாரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ரெண்டருக்கெனக் குறிப்பிட்ட பாரங்களில் இல்லாத ரெண்டர்களைக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. ரெண்டர் பாரங்கள் 1960 ம் வருடம் ஆகஸ்டு மாதம் 6 ம் திகதி மத்தியானம் 12 மணிவரையிலும் கொடுக்கப்படும்.

ரெண்டர் அடைத்திருக்கும் உறையில் இடது மேல்மூலையில் பண்டகசாலைக்கு உணவுப்பொருட்களும் மற்றைய ஏனைய பொருட்களும் ஏற்றிச்செல்லவும் பாரங்கொடுக்கவும் ரெண்டர்கள் என்று தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதி பதிவுசெய்த தபாலில் அனுப்பவும்.

எல்லாப் பண்டகசாலைகளுக்குரிய ரெண்டர்கள் 1960 ம் வருடம், ஆகஸ்டு மாதம் 8 ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குமுன், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு ரெண்டர்சபைத் தலைவருக்கு, இலக்கம் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2, என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

முழு விபரங்களும், வேலைநாட்களில் சாதாரண வேலைநேரங்களில் கண்டிப் பிரதிக் கட்டுப்பாட்டதிகாரியின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்

பி. எம். எம். விஜேசூரியா,
பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக,
கண்டி மாவட்டம்.

கண்டிக் கச்சேரி,
1960 ௵ ஜூன் ௴ 2 ந் உ.

---

## உணவுப் பகுதி

1960 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி வரைக்குமுள்ளான காலத்தில் கீழ்காணும் சேவைகள் புரிவதற்கான கோரிக்கைகள் உணவு, வர்த்தக வியாபார அமைச்சின் (உணவு, சந்தைப்படுத்தல், கூட்டுறவுப்பிரிவின்) கோரிக்கைச் சபைத் தலைவரால் தபால் பெட்டி இலக்கம் 569, யூனியன் பிளேஸ், கொழும்பு என்னும் விலாசத்தில் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சேவைகள் :—

1. குதங்களிலிருந்து கப்பற்சரக்கை அகற்றி, புகையிரதச் சாமான் வண்டிகளில் ஏற்றி, அடுக்குதல்.
2. கப்பற்சரக்கை குதங்களிலிருந்து பிரித்து, சாமான் கொண்டு செல்லும் மோட்டார் வாகனங்களில் அல்லது லொறிகளில் ஏற்றி, அடுக்குதல். (தற்போதைக்கு குமார விஜயா துறை மேடையில் மட்டும் நடைபெறும்.)
3. குதங்களிலிருந்து கப்பற்சரக்கைப் பிரித்து, அகற்றி, லொறிகளில் ஏற்றி அடுக்குதல்.
4. குதங்களிலிருந்து கப்பற்சரக்கை லொறிகளில் ஏற்றி அடுக்குதல்.
5. இழுவை மோட்டார் வண்டிகளிலிருந்து கப்பற்சரக்கைப் பிரித்து லொறிகளில் அல்லது சாமான் வண்டிகளில் ஏற்றி அடுக்குதல். தற்போதைக்கு இச்சேவை குமார விஜயா துறைமேடையில், நேரடியாக தகர்த்திறக்கப்பட்ட உணவுப்பொருட்களைக் கப்பலிலிருந்து இழுவை மோட்டார்களிலும் இருந்து நேரே சாமான் வண்டிகளுக்கு அல்லது லொறிகளுக்கு, இடையில் குதங்களில் சேகரிக்கப்படாமல் எடுத்துச் செல்லல்.
6. லொறிகளிலிருந்து உணவுக் கப்பற்சரக்கைப் பிரித்து, சாமான் வாகனங்களில் ஏற்றி திருப்பி அடுக்கி (வத்தைகளிலிருந்து லொறிகளுக்குள் ஏற்றி வாகனங்களுக்கு நேராக அனுப்பும் முனைகளில்) வைத்தல்.
7. குதங்களிலிருந்து கப்பற்சரக்கைப் பிரித்து, அகற்றி, லொறிகளில் ஏற்றி, லொறிகளில் இருந்து பிரித்து, சுமைவண்டிகளில் ஏற்றி அடுக்குதல்.
8. கப்பற்சரக்கை இழுவை மோட்டார்களிலிருந்து கவணவிழ்த்து பிரித்து, அகற்றி, குதத்துக்குள் எவ்வுயரத்துக்கும் திருப்பியடுக்குதல். (தற்போதைக்கு இச்சேவை பீ. வி. கியூ குதத்தில் மட்டுமே நடைபெறும்.)
9. கப்பற்சரக்கை லொறிகளிலிருந்து பிரித்து, குதத்தளத்தில் அடுக்கி, லொறிகளில் ஏற்றித் திரும்பவும் அடுக்குதல். (இச்சேவை பருப்பு வகைகளுக்கு மட்டுமேயாகும்.)
10. ஒரு குதத்தின் எப்பாகத்திலாவது கப்பற்சரக்கைப் பிரித்து, அகற்றி அதே குதத்தின் வேறொரு பாகத்தில் திருப்பியடுக்குதல்.
11. கொழும்புத் துறைமுகப் பகுதியிலுள்ள ஒரு குதத்தில் கப்பற்சரக்கைப் பிரித்து, லொறிகளில் ஏற்றி, அடுக்கி, திரும்ப லொறிகளிலிருந்து பிரித்து வேறொரு குதத்தில் அடுக்குதல்.
12. குதத்திலுள்ள கப்பற்சரக்கைத் தூக்கிச் சென்று அதே குதத்தில் திருப்பியடுக்குதல்.
13. மூடைகளை அடுக்குகளிலிருந்து பெருக்கு வாகனங்களுள்ள இடத்து அடுக்கி, அப்பெருக்கு வாகனங்களிலிருந்து அகற்றி, லொறிகளில் ஏற்றி அடுக்குதல். (குதங்களிலிருந்து ஒப்படைப்பதற்கு.)
14. மூடைகளை அடுக்குகளிலிருந்து பெருக்கு வாகனங்கள் உள்ள இடத்து ஏற்றி, அப்பெருக்கு வாகனங்களிலிருந்து லொறிகளுக்கு அகற்றி, ஏற்றி அடுக்குதல், பின் லொறிகளிலிருந்து பிரித்து, சுமைவண்டிகளில் ஏற்றி, திரும்ப அடுக்குதல்.
15. மூடைகளை அடுக்குகளிலிருந்து பெருக்குவாகனங்கள் உள்ள இடத்து, ஏற்றி அப்பெருக்கு வாகனங்களிலிருந்து அகற்றி, இழுவை மோட்டார்களில் ஏற்றி, இழுவை மோட்டார்களிலிருந்து பிரித்து, சுமை வண்டிகளில் அல்லது லொறிகளில் ஏற்றித் திருப்பியடுக்குதல்.
16. குதத்தின் ஒரு பாகத்திலிருந்து மூடைகளை அகற்றி, பெருக்கு வாகனங்களில் ஏற்றி, பெருக்கு வாகனங்களிலிருந்து அகற்றி, அடுக்குகளாக எவ்வுயரத்துக்கும் அமைத்தல்.

கோரிக்கைகள் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந் திகதி நண்பகல் 12 மணிவரைக்கும் கொழும்பு, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கத்திலுள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய பத்திரங்களில் (இரு பிரதிகளில்) செய்யப்படவேண்டும். உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூ. 100 கொடுத்துப்பெறும் பற்றுச்சீட்டைக் காண்பிப்பதன் பேரில் கோரிக்கைப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களடங்கிய பத்திரம், உணவு அதிகாரியின் காரியாலயத்தில் பெறலாம்.

கே. எம். டீ. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு,
1960 ௵ ஜூன் ௴ 15 ந் உ.

## ணவுப் பகுதி

10 புதிய லொறி அமைப்புச் சட்டங்களுக்கு திறந்த மாதிரிகை வெளியுருவம் அமைப்பதற்கான கோரிக்கைகள் யூனியன் பிளேஸ் கொழும்பிலுள்ள விவசாய உணவு அமைச்சின் கோரிக்கைச் சபைத்தலைவரால் 1960 ம் ஆண்டு யூலை மாதம் 15 ம் திகதி பிற்பகல் 2.30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரைக்கும் ''யூனியன் பிளேஸ்,'' கொழும்பிலுள்ள உணவு அதிகாரியிடம் தங்குபணமாக ரூபா 250 கொடுத்துப் பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் (இரு பிரதிகளில்) விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். கோரிக்கையின் நிபந்தனைகளும் தேவையான விபரங்களும் உணவு அதிகாரியிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

பி. ஆர். டி. சில்வா,
உணவு அதிகாரிக்காக.

1960 ம் ஆம் ஜூன் மீ 16 ம் உ.

---

## உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதி—வதுளை

### 1960/61 ம் வருஷத்திற்கு வதுளை மாவட்டத்தில் உணவுப் பொருட்களும் "கெயார்" பால் மாவும் ஏற்றிச் செல்லவும் பாரம் கொடுக்கவும் ரெண்டர்கள்

1960 ம் வருஷம் அக்டோபர் மாதம் 1 ந் திகதி முதல் 1961 ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி வரை வதுளை மாவட்டத்தில் உள்ள உணவுப் பண்டகசாலைகளுக்கு, உணவுப்பொருட்களும், "கெயார்" மாவும் ஏற்றிச் செல்ல ரெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். வதுளை, பண்டாரவளை, அப்புத்தளை ஆகிய உணவுப் பண்டகசாலைகளுக்குரிய ரெண்டர்கள் கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும் :—"சபைத்தலைவர், ரெண்டர்சபை, உணவு வர்த்தக அமைச்சு, இலக்கம் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2" ஹாலிஎல, எல்லை ஆகிய உணவுப் பண்டகசாலைகளுக்குரிய ரெண்டர்கள் வதுளைப் பிரிவு உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்பப்படல் வேண்டும். மேற்படி ரெண்டர்கள் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் திகதி பிற்பகல் 2.30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

வதுளைப் பிரிவு உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பஞ்செய்து பெற்றுக்கொண்ட மாதிரிப்பத்திரங்களிலேயே எல்லா ரெண்டர்களும் இருபிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வதுளைப் பிரிவு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும் ரெண்டர்களுக்கு ரூ. 50 ம் ரெண்டர் சபையினரால் ஏற்றுக்கொள்ளப்படும் ரெண்டர்களுக்கு ரூ. 250 ம் கட்டுப்பணமாக செலுத்தப்படல் வேண்டும். மேற்படி ரெண்டர் மாதிரிப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும்.

முழு விபரங்கள், வேலை நாட்களில் சாதாரன வேலை நேரங்களில் வதுளைப்பிரிவு உணவுக்கட்டுப்பாட்டதிகாரியின் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி விபரங்களை விளம்பரங்கள் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

துவான் இஸக்கின் காசிம்,
பிரிவு உணவுக்கட்டுப்பாட்டதிகாரிக்காக,
வதுளை மாவட்டம்.

கச்சேரி, வதுளை,
1960 ம் ஆம் ஜூன் மீ 15 ந் உ.

---

## தபாற் தந்திப் பகுதி

### 300 ஆண்களின் மிதிவண்டிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

இப்பகுதி அளிக்கும் நியமனங்களுக்கிணங்க உற்பத்தியாளரிடமிருந்து அல்லது விற்பனையாளரின் தத்துவம் பெற்ற முகவர்களிடமிருந்து 300 ஆண்களின் மிதிவண்டிகள் வளங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4 ந் திகதி, காலை 9.30 மணிவரை கொழும்பு, பிரதம தபாற் கந்தோர், தபாற் தந்தித் தலைமை அதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திர விண்ண்ப்பங்கள் கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். அவரிடமிருந்தே எல்லா விபரங்களும் பெற்றுக் கொள்ளலாம். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்திக்காசாளரிடம் கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3 ந் திகதி பி.ப. 4 மணிவரை வழங்கப்படும்.

4. ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றப் போதிய உத்தரவாதங்களைத் தமது செலவிலேயே தருவதற்கு, தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திர விண்ணப்பதாரர் வேண்டப்படுவர். ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், கேள்விப் பத்திர மதிப்பின் 5 வீதத் தொகையை தபாற் தந்திக் தலைமை அதிபதியிடம் காசாக பிணைப்பணம் கட்ட வேண்டப் படுவதுடன், ஒப்பந்தத்திற் சேரும்போது உடன்படிக்கையில் முத்திரைச் சட்டப்படி முத்திரைகளை ஒட்டவும் கடமைப்பட்டவராவர்.

5. 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4 ந் திகதி மு.ப. 10 மணிக்கு பிரதம தபாற் கந்தோர், தபாற் தந்தித் தலைமை அதிபதி காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள் சமுகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்தின,
தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு, 17.6.1960.

---

## தபாற் தந்திப் பகுதி

### இரண்டு உருக்கு கிராதிக் கம்பங்களை கழற்றி ஏற்றிச் சென்று வர்ணந் தீட்டி நாட்டுவதற்கான கேள்விப் பத்திரங்கள்

திருகோணமலை நிலாவெளியில் இப்போதிருக்கும் 220 அடி நீளமுள்ள இரண்டு உருக்கு கிராதிக் கம்பங்களை கழற்றி ஏற்றிச் சென்று வர்ணந் தீட்டி, அதிலிருந்து 200 அடி நீளத்தில், தபாற் தந்திப் பகுதிக்கான வெலிக்கடை கம்பியிலி நிலையத்தில் நாட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள், 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4 ந் திகதி காலை 9.30 மணிவரை தபாற் தந்தித் தலைமை அதிபதியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திர சாசனங்கள் பார்வையிடுவதற்காக, கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியர் காரியாலயத்தில் கிடைக்கும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்திக் காசாளரிடம் கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திர நிபந்தனைகளின்படி கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3 ந் திகதி வரை வழங்கப்படும்.

4. கேள்விப் பத்திர முடிவு திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரை கேள்விப் பத்திரங்கள் ஒப்புக் கொள்வதற்குத் தகுதியானவைகளாக இருக்க வேண்டும். 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4 ந் திகதி, கொழும்பு பிரதம தபாற் கந்தோர், தபாற் தந்தித் தலைமை அதிபதி காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது, கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள் சமுகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு, 17.6.1960.

---

### "கெயர்" மா, இதர உணவுப் பொருட்கள் ஆதியன கொண்டு செல்வதற்கான கேள்விப் பத்திரங்கள்

### மாத்தளை மாவட்டம்—1960/61

1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம், 1961 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதி வரையுமுள்ள நிதி வருடத்தில், மாத்தளை மாவட்டத்தில் "கெயர்" மாவும் இதர உணவுப் பொருட்களும் கொண்டு செல்வதற்கான, கேள்விப் பத்திரங்களை 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ந் திகதி பி.ப. 2.30 மணிவரை, கொழும்பு, உணவு, வர்த்தக, வியாபார மந்திரிக் காரியாலய கேள்விச் சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மாத்தளைக் கச்சேரி பிரதிக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) யிடமிருந்து பெற்றுக் கொண்ட பத்திரங்களில் கேள்வி நிரப்பி அனுப்ப வேண்டும். கேள்விப் பத்திரம் கொடுக்கப்படுமுன்பு, ரூ. 250 மாத்தளைக் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ந் திகதி, மத்தியானம் 12 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும். மேற்கொண்டு விபரங்களை மாத்தளை பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பந்துல சோமசிரி தி சில்வா,
மாத்தளை பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக.

மாத்தளைக் கச்சேரி,
17.6.60.

# ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

AX 4002.

## கள்ளுக் குத்தகை விற்பனவு — கொழும்பு டிஸ்திறிக், 1960 — 1961

1960 ம் ஆண்டு மே மாதம் 6 ந் திகதி வெளியாய 12,127 ம் இலக்க அரசாங்க "கசெற்" பத்திரிகையிற் பிரசுரித்த கள்ளுக் குத்தகை விற்பனவு நிபந்தனைகளுக்கும் 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 14 ந் திகதி வெளியாய 12,107 ம் இலக்க அரசாங்க "கசெற்" பத்திரிகையிற் பிரசுரித்த 489 ம் இலக்க மதுபானத் தீர்வை அறிவித்தலிற் காணப்படும் மதுபானத்தீர்வை லைசென்ஸ் பத்திரங்கள் அனைத்திற்கும் ஏற்புடையனவாய பொது நிபந்தனைகளுக்கும் அமைய, இதன் கீழ்க் குறித்த கள்ளுத் தவறணைகளில் 1960 ம் ஆண்டு ஒக்ற்றோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி முடியவுள்ள காலத்தில் கள்ளைச் சில்லறைக்கு விற்கும் பிரத்தியேக உரித்தை வாங்குவதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் இத்தால் வரவழைக்கப்படுகின்றன.

2. கீழே கொடுபடும் காரியாலயங்களிற் பெறற்பாலனவாய மாதிரிப் பத்திரங்களில் ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விப்பத்திரமும் தயாரிக்கப்பட்டு, (எ) ம் நிரையில் ஒவ்வொரு தவறணைக்கும் எதிரே குறிக்கப்பட்ட தொகைப் பணத்தைக் கட்டினதற்கு அறிகுறியாகக் கச்சேரிப் பற்றுச்சீட்டையும் கொண்டிருக்கவேண்டும் :—

(அ) யாதேனும் கச்சேரி ;

(ஆ) மதுபானத் தீர்வைக் கொமிஷனர் காரியாலயம், மக்கலம் வீதி, கொழும்பு ;

(இ) வட்டார மதுபானத் தீர்வைக் காரியாலயம், கொழும்பு ;

(ஈ) வட்டார மதுபானத் தீர்வைக் காரியாலயம், களுத்துறை ;

(உ) வட்டார மதுபானத் தீர்வைக் காரியாலயம், சிலாபம்.

3. ஒவ்வொரு ஒப்பந்தக் கேள்விப் பத்திரமும் மெழுகிட்டு முத்திரை பொறித்த காகித உறையில் வைக்கப்பட்டு, உறையின் இடதுகை மேல் மூலையில் "கள்ளுத் தவறணைக்கு/தொகுப்புத் தவறணைக்கு ஒப்பந்தக் கேள்விப்பத்திரம்............. டிஸ்திறிக், 1960–61" என்று எழுதப்பட்டு, கொழும்பு மாநகரசபைத் தவறணைகள், கொழும்பு டிஸ்திறிக்கிலுள்ள இல. 1–6, தொகுப்பு இல. I ம், 9–17 முடியவுள்ள தவறணைகள் ஆகியவை தொடர்பில் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 5 ந் திகதியன்றும், கீழே கொடுபட்டவண்ணம் கொழும்பு டிஸ்திறிக்கிலுள்ள ஏனைய தவறணைகள் தொடர்பில் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 6 ந் திகதியன்றும், ஒவ்வொரு தவறணைக்கும் எதிரே குறிக்கப்பட்ட நேரத்தில் அல்லது முன்னர், கொழும்பு மாவட்ட அதிபரை அடையத்தக்கதாக அனுப்பப்படவேண்டும். ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களைப் பெறுதற்குக் குறிப்பிட்ட இறுதி நேரத்தில் ஒப்பந்தக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தை அனுப்பியவர், உரித்தை வாங்கியவர் என்று கூறப்பட்டவுடன், இதனகத்து முன்னர் குறிப்பிட்ட கள்ளுக்குத்தகை விற்பனவு நிபந்தனைகளின் 9 ம் நிபந்தனையின் பிரகாரம் அவ்வுரித்தின் பேரால் பாதுகாப்புவைப்புப்பணமாக இரண்டு மாதக் குத்தகைப் பணத்துக்குச் சமமான தொகையை மாவட்ட அதிபருக்குக் கட்டுவதோடு, விற்பனவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டொழுகுவதாகக் கையொப்பமுமிடுவர்.

5. உரித்தை வாங்கியவர் என்று யாரேனும் ஓர் ஒப்பந்தக் கேள்விக்காரர் கூறப்பட்டபின், விற்பனவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டொழுகுவதாகக் கையொப்பமிடுமாறு அவர் கேட்கப்படுமிடத்து அல்லது பாதுகாப்பு வைப்புப் பணத்தைக் கட்டுமாறு அவர் கேட்கப்படுமிடத்து, அவர் அவ்வாறு செய்யத்தவறின், அவருடைய ஒப்பந்தக் கேள்விப் பத்திரக் கட்டுப்பணம் பறிமுதல் செய்யப்படும் ; மேலும், மதுபான லைசென்ஸ் பத்திரங்கள் சகலவற்றின் தொடர்பிலும் அவருடைய பெயர் தவறுவோர் பெயர்கள் நிரலில் இடப்படுதற்கும் அவர் பாத்திரராவர். இச்சந்தர்ப்பம் தவிர, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தை அனுப்பியர் தாம் விற்பனவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டொழுகுவதாகக் கையொப்பமிட்டுக் குறித்த பாதுகாப்பு வைப்புப் பணத்தைக் கட்டியவுடன், ஏனைய ஒப்பந்தக் கேள்விக்காரருடைய ஒப்பந்தக் கேள்விப்பத்திரக் கட்டுப்பணங்கள் அவர்களுக்குத் திருப்பிக்கொடுக்கப்படும்.

6. யாதேனும் ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தை அல்லது சகல ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களையும் எவ் வித காரணமும் காட்டாது ஏற்க மறுக்கும் உரித்து மாவட்ட அதிபருக்குண்டு.

7. இலங்கை அரசாங்கத்தின் (வட்டி ஈயும் யுத்தக்கடன்கள் உட்படவுள்ள) வட்டி ஈயும் கடன் எதன் பேரிலும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக் கடன் பத்திரங்களை, தவறணைக்குத்தகை பெற்ற எவரும் பாதுகாப்பு வைப்புப் பணமாகக் கொடுக்கலாம். வங்கிகளில் இட்டுவைக்கும் பணங்களுக்குக் கொடுபடும் வட்டியைக் காட்டிலும் கூடிய வட்டியை இக்கடன்கள் ஈகின்றன. அரசாங்கம் ஒவ்வொரு அரைவருட முடிவிலும் வட்டியைக் கடன் கொடுத்தவருக்குக் கொடுக்கிறது. எந்தக் குத்தகைபேரிலும் கொடுத்த கடன் பத்திரங்களை அக்குத்தகை முடிந்தபின்னர் வேறு குத்தகைகளின் பேரில் பாதுகாப்பு, வைப்புப் பணமாகக் கொடுக்கலாம். வேறு குத்தகைகள் இல்லாதவிடத்து, எவ்வித நஷ்டமுமின்றி வெளியில் இவற்றின் பெறுமதியைப் பெற்றுக்கொள்ளலாம். வங்கிகள் மேலதிகக் கடன்களைக் கொடுத்தற்கு இப்பத்திரங்களைப் பொறுப்பாக ஏற்கின்றனர்.

8. மேலதிக விவரங்களைக் கொழும்புக் கச்சேரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்புக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 17 ந் வ.

ஜீ. பி. தம்பையா,
மாவட்ட அதிபர்.

### மேலே குறிப்பிட்ட தவறணைகள் கொழும்பு டிஸ்திறிக்கிலுள்ள கள்ளுத்தவறணைகளைக் கொண்ட அனுமதிக்கப்பட்ட நிரல்—

### கொழும்பு மாநகர சங்கம்

### (1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 5 ந் திகதி விற்பனவு)

| தொடர் இலக்கம் | பிரிவு | ஸ்தல இடப்பரப்பு (இவ்விடப்பரப்பினுள் தவறணை அமைக்கப்பட வேண்டும்) | ஒப்பந்தக் கேள்விப்பத் திரங்களைப் பெறும் இறுதி நேரம் | தவறணை யைத்திறக்கும் நேரம் | தவறணையை மூடும் நேரம் | ஒப்பந்தக் கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3 ம் பிரிவு, மாதம் பிட்டி | பின்வரும் எல்லைகளுக்குளடங்கிய இடப்பரப்பு : வடக்கு எல்லை : லூக்கஸ் வீதிச் சந்தி தொடக்கம் நகலகம் வீதிச் சந்திவரையுள்ள வேர்கூசன் வீதியின் தெற்குப் பக்கம், கிழக்கு எல்லை : வேர்கூசன் வீதிச் சந்தி தொடக்கம் மாதம்பிட்டி வீதிச் சந்தி வரையுள்ள நகலகம் வீதியின் மேற்குப்பக்கம், தெற்குஎல்லை: நகலகம் வீதிச் சந்திதொடக்கம் லூக்கஸ் வீதிச் சந்திவரையுள்ள மாதம்பிட்டி வீதியின் வடக்குப்பக்கம், மேற்கு எல்லை: மாதம்பிட்டி வீதிச் சந்திதொடக்கம் வேர்கூசன் வீதிச் சந்தி வரையுள்ள லூக்கஸ் வீதியின் கிழக்குப் பக்கம் | முற்பகல் 10 மணி | முற்பகல் 7 மணி | பிற்பகல் 7 | 5,000 |

| தொடர் இலக்கம் | பிரிவு | ஸ்தல இடப்பரப்பு (இவ்விடப்பரப்பினுள் தவறணை அமைக்கப்பட வேண்டும்) | ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களைப் பெறும் இறுதி நேரம் | தவறணையைத்திறக்கும் நேரம் | தவறணையை மூடும் நேரம் | ஒப்பந்தக் கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 2 | 3 ம் பிரிவு, மாதம் பிட்டி | பின்வரும் எல்லைகளுக்குளடங்கிய இடப்பரப்பு : வடக்கு எல்லை : மட்டக்குளித் தேவாலய வீதிச் சந்தியிலிருந்து ஆறுவரையுள்ள வேர்கூசன் வீதியின் தெற்குப் பக்கம், கிழக்கு எல்லை : வேர்கூசன் வீதிச் சந்தியிலிருந்து மாதம்பிட்டி வீதிச் சந்தி வரையுள்ள லூக்கஸ் வீதியின் மேற்குப் பக்கம், தெற்கு எல்லை : லூக்கஸ் வீதிச் சந்தியிலிருந்து டானியெல்ஸ் வீதிச் சந்திவரையுள்ள மாதம்பிட்டி வீதியின் வடக்குப் பக்கம், மேற்கு எல்லை : மாதம்பிட்டி வீதிச்சந்தியிலிருந்து ஹின முல்லை ஒழுங்கைச் சந்திவரையுள்ள டானியெல்ஸ் வீதியின் கிழக்குப் பக்கம் | முற்பகல் 10.15 மணி .. | முற்பகல் 7 மணி .. | பிற்பகல் 7 மணி .. | 5,000 |
| 3 | 2 ம் பிரிவு, முகத்துவாரம் | (அ) அளுத்மாவத்தை வீதிச் சந்தி தொடக்கம் சென். அன்றூஸ் வீதிச் சந்திவரையுள்ள மேல் சென். அன்றூஸ் பிளேசின் இரு பக்கங்களும், (ஆ) மேல் சென். அன்றூஸ் பிளேஸ் சந்தி தொடக்கம் மாஷல் வீதிச் சந்திவரையுள்ள சென். அன்றூஸ் வீதியின் இரு பக்கங்களும், (இ) மாஷல் வீதிச் சந்தி தொடக்கம் மாதம்பிட்டி வீதிச் சந்தி வரையுள்ள முகத்துவார வீதியின் இரு பக்கங்களும், (ஈ) முகத்துவார வீதிச் சந்தி தொடக்கம் அளுத்மாவத்தை வீதிச் சந்திவரையுள்ள சென். ஜேம்ஸ் வீதியின் இரு பக்கங்களும், (உ) எல்லி ஒழுங்கைச் சந்தி தொடக்கம் கீழ் சென். அன்றூஸ் பிளேஸ் சந்தி முடியவுள்ள அளுத்மாவத்தை வீதியின் இருபக்கங்களும் | முற் பகல் 10.30 மணி .. | ஷை .. | ஷை .. | 5,000 |
| 4 | 5ம் பிரிவு, கொட்டாஞ்சேனை மேற்கு | பின்வரும் எல்லைகளுக்குளடங்கிய இடப்பரப்பு : வடக்கு எல்லை : கோட்டேபோம் வீதிச் சந்தி தொடக்கம் லாஸ்கோறின் வீதிச் சந்திவரையுள்ள ஸ்கின்னேஸ் வீதியின் தெற்குப் பக்கம் : கிழக்கு எல்லை : ஸ்கின்னேஸ் வீதிச் சந்தி தொடக்கம் ஜம்பெற்றுவீதிச் சந்திவரையுள்ள லாஸ்கொறீன் வீதியின் மேற்குப் பக்கம், தெற்கு எல்லை : லாஸ்கொறீன் வீதிச் சந்தி தொடக்கம் கோட்டேபோம் வீதிச் சந்திவரையுள்ள ஜம்பெற்று வீதியின் வடக்குப் பக்கம், மேற்கு எல்லை : ஜம்பெற்று வீதிச் சந்தி தொடக்கம் வடக்கு ஸ்கின்னேஸ் வீதிச் சந்திவரையுள்ள கோட்டேபோம் வீதியின் கிழக்குப் பக்கம் | முற் பகல் 10.15 மணி .. | ஷை .. | ஷை .. | 5,000 |
| 5 | ஷை .. | பிக்கறிங்ஸ் வீதிச் சந்தி தொடக்கம் கோட்டேபோம் வீதிச் சந்தி வரையுள்ள வடக்கு ஸ்கின்னேஸ் வீதியின் வடக்குப் பக்கம் | முற் பகல் 11.00 மணி .. | ஷை ... | ஷை .. | 5,000 |

**(கொழும்பு மாநகர சபை தவிர்ந்த) கொழும்பு டிஸ்திறிக்**

| தொடர் இலக்கம் | பிரிவு | ஸ்தல இடப்பரப்பு | இறுதி நேரம் | திறக்கும் நேரம் | மூடும் நேரம் | கட்டுப் பணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 6 | அளுத்குறுகோறளை தெற்கு | கந்தானைக் கிராமத்தினுள் .. .. | முற் பகல் 11.15 மணி | முற் பகல் 7.00 மணி | பிற் பகல் 7.00 மணி | 5,000 |
| 7 | ஷை .. | திம்பிறிகஸ்யாய கிராமத்தினுள் முதலாம் நம்பர்த் தொகுதி .. | முற் பகல் 11.30 மணி | ஷை .. | ஷை .. | 5,000 |
| 8 | ஷை .. | உஸ்வெற்றகெய்யாவ கிராமத்தினுள் முதலாம் நம்பர்த் தொகுதி .. | முற் பகல் 11.30 மணி | ஷை .. | ஷை .. | 5,000 |
| 9 | அளுத்குறுகோறளை வடக்கு (A) | முகலன்கமுவ கிராமத்தினுள் .. .. | முற் பகல் 11.45 மணி | ஷை .. | ஷை .. | 4,000 |
| 10 | ஷை .. | கட்டுநாயக்க கிரராமத்தினுள் .. .. | நண் பகல் 12.00 மணி | ஷை .. | ஷை .. | 4,000 |
| 11 | அளுத்குறுகோறளை வடக்கு (B) | டாகொன்னைக் கிராமத்தினுள் .. .. | பிற் பகல் 2.00 மணி | ஷை .. | ஷை .. | 3,000 |
| 12 | அளுத்குறுகோறளை வடக்கு (A) | பிற்றிப்பான கிராமத்தினுள் .. .. | பிற் பகல் 2.15 மணி | ஷை .. | ஷை .. | 3,000 |
| 13 | ஷை .. | சிற்றப்பதுவ கிராமத்தினுள் .. .. | பிற் பகல் 2.30 மணி | ஷை .. | ஷை .. | 2,500 |
| 14 | நீர்கொழும்பு மாநகரசபை, 11 ம் பிரிவு | நீர்கொழும்பு மாநகர சபையினுள்ள குருனை–போலவலானை, 11 ம் பிரிவிலுள்ள குருனைக் கிராமத்தினுள் | பிற் பகல் 2.45 மணி | முற் பகல் 7.30 மணி | பிற் பகல் 7.30 மணி | 4,000 |
| 15 | நீர்கொழும்பு மாநகரசபை 10 ம் பிரிவு | நீர்கொழும்பு மாநகர சபையினுள்ள பெரிய தெரு, 10 ம் பிரிவிலுள்ள பொலவலானைக் கிராமத்தினுள் | பிற் பகல் 3.00 மணி | ஷை .. | ஷை .. | 5,000 |
| 16 | கொச்சிக்கடை பட்டின சங்கம் | கொச்சிக்கடைப் பட்டினத்தின் பட்டின சங்க எல்லைகளுக்குள் .. | பிற் பகல் 3.15 மணி | முற் பகல் 7.00 மணி | பிற் பகல் 7.00 மணி | 4,000 |
| 17 | அளுத்குறுகோறளை வடக்கு (B) | பசியாவத்தைக் கிராமத்தினுள் .. .. | பிற் பகல் 4.30 மணி | ஷை .. | ஷை .. | 1,500 |

**1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 6 ந் திகதி விற்பனவு**

| தொடர் இலக்கம் | பிரிவு | ஸ்தல இடப்பரப்பு | இறுதி நேரம் | திறக்கும் நேரம் | மூடும் நேரம் | கட்டுப் பணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 18 | அளுத்குறுகோறளை வடக்கு (A) | பம்புக்குளியாக் கிராமத்தினுள் .. .. | 10.00 மணி | 7 மணி .. | 7 மணி .. | 1,500 |
| 19 | ஷை .. | எற்கல கிராமத்தினுள் .. .. .. | 10.15 மணி | ஷை .. | ஷை .. | 2,500 |
| 20 | ஷை .. | கற்றுனைக் கிழக்குக் கிராமத்தினுள் .. .. | 10.30 மணி | ஷை .. | ஷை .. | 3,000 |
| 21 | ஷை .. | டளுப்பொத்தைக் கிராமத்தினுள் .. .. | 10.45 மணி | ஷை .. | ஷை .. | 3,000 |

| தொடர் இலக்கம் | பிரிவு | ஸ்தல இடப்பரப்பு (இவ்விடப்பரப்பினுள் தவறணை அமைக்கப்பட வேண்டும்) | ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைப் பெறும் இறுதி நேரம் | தவறணையைத்திறக்கும் நேரம் | தவறணையைமூடும் நேரம் | ஒப்பந்தக் கேள்விப் பத்திரக்கட்டுப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 22 | அளுத்குறு கோறளை வடக்கு (A) | பலகத்துறை கிழக்கு கிராமத்தினுள் .. | முற்பகல் 11.00 மணி | முற்பகல் 7 மணி | பிற்பகல் 7 மணி .. | 3,000 |
| 23 | ஷை .. | போறுத்தோட்டைக் கிராமத்தினுள் .. .. | 11.15 மணி | ஷை .. | ஷை .. | 2,500 |
| 24 | நீர்கொழும்பு மாநகரசபை, 3 ம் பிரிவு | நீர்கொழும்பு மாநகர சபையின் 3 ம் பிரிவிலுள்ள காமச்சோடைக் கிராமத்தினுள் | 11.30 மணி | 7.30 மணி | 7.30 மணி | 5,000 |
| 25 | நீர்கொழும்பு மாநகர சபை, 9 ம் பிரிவு | நீர்கொழும்பு மாநகர சபையிலுள்ள உடையார் தோப்பு, 9 ம் பிரிவிலுள்ள உடையார் தோப்புக் கிராமத்தினுள் | 11.45 மணி | ஷை .. | ஷை .. | 3,000 |
| 26 | நீர்கொழும்பு மாநாகர சபை 5 ம் பிரிவு | நீர்கொழும்பு மாநகர சபையிலுள்ள குடாப்படுவ, 5 ம் பிரிவிலுள்ள குடாப்படுவ கிராமத்தினுள் .. .. | நண்பகல் 12.00 மணி | ஷை .. | ஷை .. | 3,000 |
| 27 | அளுத்குறுகோறளை தெற்கு | மகாவத்தைக் கிராமத்தினுள் இரண்டாம் நம்பர் தொகுதி | பிற்பகல் 2.00 மணி | 7.00 மணி | 7.00 மணி | 3,000 |
| 28 | ஷை .. | போப்பிட்டிக் கிராமத்தினுள் இரண்டாம் நம்பர்த் தொகுதி | ஷை ... | ஷை .. | ஷை .. | 3,000 |
| 29 | ஷை .. | டாண்டுகம கிராமத்தினுள் இரண்டாம் நம்பர்த் தொகுதி | ஷை .. | ஷை .. | ஷை .. | 3,000 |
| 30 | ஜா-எல நகரசபை, பிரிவு | ஜா-எல நகரசபையிலுள்ள கனுவான வடக்கு, 1 ம் பிரிவிலுள்ள கனுவான கிராமத்தினுள் (மூன்றும் தொகுதி) | 2.15 மணி | 7.30 மணி | 7.30 மணி | 5,000 |
| 31 | ஜா-எல நகர சபை 2 ம் பிரிவு | ஜா-எல நகர சபையிலுள்ள ஹெற்றிகம, 2 ம் பிரிவிலுள்ள வெலிகம்பிட்டிக் கிராமத்தினுள் (மூன்றும் நம்பர்த்தொகுதி) | ஷை .. | ஷை | ஷை .. | 5,000 |
| 32 | அளுத்குறுகோறளை தெற்கு | எக்கல்-மெகொடபொலாந்த கிராமத்தினுள் (மூன்றும் நம்பர்த் தொகுதி) | ஷை .. | ஷை .. | ஷை .. | 5,000 |
| 33 | அளுத்குறுகோறளை வடக்கு (B) | டேமன்கந்திய கிராமத்தினுள் .. .. | 2.30 மணி | ஷை .. | ஷை ... | 3,000 |

# நானாவிதம்

## தேசிய வீடமைப்புப் பகுதி

### பம்பலப்பிட்டி அடுக்குமாடிக் கட்டிடத்திற் கடைகளுக்குரிய இடங்களை வாடகைக்கெடுத்தல்

பம்பலப்பிட்டி அடுக்குமாடிக் கட்டிடங்களில் கடைகளுக்குரிய இடங்களை வாடகைக்கெடுக்க விலை கேட்டல் கொழும்பு 2 ல், பாசன் வீதியிலுள்ள எனது கந்தோரில் 1960 ம் ஆண்டு யூன் மாதம் 28 ந் தேதி காலை 10 மணிக்கு நிகழும்.

ஏலம் மூலம் வழங்க ஆறு கடையிடங்களுண்டு. ஒவ்வொரு கடைக்கும் 675 சதுர அடிப் பரப்பு உண்டு. ஒவ்வொரு கடையிடமினதும் மாதாந்த வாடகை ரூபா 350 ஆகும்.

குத்தகையேலங்கூறுதல் ஆயிரம் ரூபாவிலிருந்து ஆரம்பமாகும். குறித்துரைக்கப்படும் வியாபாரங்களை நடாத்தச் சம்மதமானவர்களுக்கிடையே ஏலங்கூறப்படும்.

ஒவ்வொரு இடத்தையும் உயர்தொகைக்குக் கேட்பவருக்கே அவ்வவற்றின் குத்தகையுரிமை வழங்கப்படும். மேலே காட்டப்பட்ட ஆரம்பக் கேள்விக்குக்குறைந்த தொகைக்கேள்வி எவ்விடத்திலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏலங்கூறுப்படவிருக்கும் ஆறு கடையிடங்களும் பின்வரும் நோக்கங்களுக்கானவை ஆகும்.—

(1) **மயிரழகுபடுத்துஞ் சலூன்.**—ஆண்களினதும் பெண்களின்தும் தேவைக்குதவுதல் வேண்டுமென்பது குத்தகை உடன்படிக்கையின் ஒரு நிபந்தனையாகும்.

(2) **மருந்துப்பாகசாலை.**—மருந்துப்பாகசாலை திறந்திருக்கும் நேரம் முழுமையிலும் அங்கு சமூகமாயிருக்கும் மருந்துப்பாகப் பயிற்சித்தகைமையுடைய ஆள் கடமையாற்றுதல் கைச்சாத்திடப்படுங் குத்தகை யுடன்படிக்கையின் ஒரு நிபந்தனையாகும். இதுக்குப் பொறுப்பாகவமையும் மருந்துப்பாகஸ்தர் வசிப்பதற்கு மாடியொன்று வாடகைக்கு வசதிப்படும்:

வைத்தியஞ் செய்வோர் எவரும் உசாவறை அல்லது மருந்தகம் நடாத்தும் நோக்கத்திற்காக ஏலங்கேட்டல் அனுமதிக்கப்படமாட்டாது.

(3) **பலசரக்கு.**—பலசரக்கு விற்கப்படுதற்கு ஒரு கடை.

ஏலத்திற்கு விடப்படா மூன்று கடைகளுள் ஒன்று சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அதிகாரிக்கு வழங்கப்பட்டிருப்பதால், மரக்கறிக்கடை நடாத்தக் கேள்வி கேட்டல் அனுமதிக்கப்படமாட்டாது. ஏலத்துக்குவிடப்படாதிருக்கும் இன்னொருகடை பாற்சபைக்கு வழங்கப்படுகின்றது.

விலைக்கேள்வி எதனையும் தன் தீர்மானத்துக்குக் காரணம் எதுவுங் காட்டாமல் ஏற்றுக் கொள்ளவோ தள்ளவோ அதிகாரி உரிமையை வைத்துக் கொள்ளுகின்றார். அவரது கட்டளை இறுதியானது.

வெற்றியுறுங் கேள்வியாளர், அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், கேள்வித்தொகையில் 25 சதவிகிதத்தையும் மூன்று மாத வாடகையையும். அதிகாரியிடங் கட்டக்கடவர். இருவாரங்களுள் மிகுதித்தொகை கட்டுப்படாவிடின் வைப்புப்பணம் பறிமுதலாகும். கட்டப்படும் கேள்வித் தொகை மீளளிக்கப்படமாட்டாது.

வெற்றியுறுங் கேள்வியாளர் தாம் கேட்ட தொகையையும், வைப்புப்பணமாக மூன்றுமாத வாடகையையும் கட்டிய பின்னர், ஒரு குத்தகை யுடன்படிக்கையை நிறைவேற்றுவர். அதில் பல நிபந்தனைகளுடன் பின் வருவனவும் உட்படும்—

(அ) வாடகைக்காரராக வரும் வெற்றியுற்ற கேள்வியாளர் வாடகைக்கெடுத்துள்ள இடத்திலுள்ள தமது நலனைத் தேசிய வீடமைப்பு அதிகாரியிடம் எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளும் சம்மதத்துடன் அல்லாது உபவாடகைக்குவிடவோ, விற்கவோ, நன்கொடைகொடுக்கவோ, ஈடுவைக்கவோ, அல்லது வேறுவழியில் வழங்கவோ புழங்கவோ உரிமையற்றவராவர் ;

(ஆ) வாடகைக்காரராக வரும் வெற்றியுற்ற கேள்வியாளர் வாடகைக்கெடுத்துக் கொள்ளும் கட்டிடத்தைத் தமது செலவில் நல்ல திருத்தத்தில் எப்பொழுதும் பாதுகாக்கவும், வாடகையிடத்தைச் சுற்றி மதிற்சுவர் எழுப்பி அல்லது நிலையான வேலையமைத்து அதைப் பழுதுபார்த்து நல்ல முறையில் வைத்து இருக்கவுங் கடமைப்பட்டவராவர் ;

(இ) வாடகைக்காரராக வரும் வெற்றியுற்ற கேள்வியாளர் தமது குத்தகை முடியும்போது வாடகைக்கெடுத்திருந்த இடத்தையும் அங்கே எழுப்பியிருந்த கட்டிடங்களையும் விஸ்தரிப்புகளையும் திருத்தியமைக்கப்பட்டவற்றையும் இணைப்புகளையும் பழுதில்லாமல் நல்ல நிலைமையில் தேசிய வீடமைப்பு அதிகாரிக்குக் கையளிக்கக்கடமைப்பட்டவராவர். சொல்லப்பட்ட கட்டிடங்கள், விஸ்தரிப்புகள், திருத்தங்கள், இணைப்புகள் ஆகியன சம்பந்தமாக எக்கணக்கிலும் எவ்வித ஈடு செய்தலுக்கும் உரிமையற்றவராவர் ;

(ஈ) ஐந்து ஆண்டுக்கொருமுறை, அவசியமானல், வாடகை மீளக் கணித்தமைக்கப்படும்.

மேற்கண்டவற்றையிட்டு வேண்டிய பிற விபரங்களுக்கு தேசீய வீடமைப்பு அதிகாரிக்கு எழுதிக் கொள்ளலாம்.

ஆர். எல். ஆனோல்டா,
தேசீய வீடமைப்பதிகாரி.

கொழும்பு, 2.

## தேசிய வீடமைப்புப் பகுதி

பம்பலப்பிட்டி வீடமைப்புத் திட்டத்திலே காலிவீதியை நோக்கி அமைந்திருக்கும் 2 ம் இலக்கக் கடையை வாடகைக்கு விட்டு அதிலே கொழும்பு மாநகரசங்கத்திடம் இறைச்சி (மாடும், ஆடும்) விற்க உத்தரவுச் சீட்டுகள் அல்லது அனுமதிச் சீட்டுகள் பெற்றுக் கொள்ள தகுதியுடையோரிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

தேசிய வீடமைப்பு அதிகாரியின் கந்தோரில் தகைமையுடைய விண்ணப்பகாரர்களுக்கு கேள்விப் பத்திரங்கள் வசதிப்படும். கேள்விப்பத்திரம் வேண்டுவோர் சொல்லப்பட்ட உத்தரவு அல்லது அனுமதி உடையவர்களாக அல்லது சொல்லப்பட்ட உத்தரவினை உறுதிப்படுத்த இயன்றவர்கள் என்பதை அல்லது சொல்லப்பட்ட உள்ளூர் அதிகாரியிடம் குறித்த உத்தரவு அல்லது அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்களென்பதை அதிகாரிக்கு அத்தாட்சிப்படுத்தத் தக்கவர்களாக விருத்தல் வேண்டும்.

வெற்றியுறும் கேள்வியாளர் சொல்லப்பட்ட இறைச்சியை இதன்கீழ் காணப்படும் விலைகளுக்கு மேற்படாமல் விற்கக் கடமைப்பட்டவரும் இத்தால் பணிக்கப்படுபவருமாவர்.

| | | | |
|---|---|---|---|
| மாட்டிறைச்சி எலும்புடன் ஓர் இறாத்தல் | | .. | 0 75 சதம் |
| மாட்டிறைச்சி எலும்பில்லாமல் | ,, | .. | 0 85 சதம் |
| ஆட்டிறைச்சி எலும்புடன் | ,, | .. | 1 75 சதம் |
| ஆட்டிறைச்சி எலும்பில்லாமல் | ,, | .. | 1 95 சதம் |

கொழும்பு மாநகர சங்கத்தைச் சார்ந்த பொது மக்கள் சௌக்கியப் பகுதி விதிக்கும் பல நிபந்தனைகளுள் பின்வருவன தகைமைத்தாய கேள்வியாளர் பிரதானமாக அறியவேண்டியன :—

(1) கூடம் வெளிச்சம் நன்கு வைக்கப்பட்டதாகவும் காற்றோட்டம் நன்கு பொருந்தியதாகவும் நிலப்பரப்பு 120 ச. அடிகளாயினும் உடையதாக இருத்தல் வேண்டும் ;

(2) எண்ணெய் நிறப்பூச்சு மரவேலையில் பூசுதல் வேண்டும் ;

(3) நிலம் 4″ தடிப்பான சீமெந்துக் " கொங்கிறீற் "றினால் செய்யப்பட்டு மென்மையான படை சீமெந்தினால் அடைக்கப்பட வேண்டும் ;

(4) பாவுசட்டம் (சீலிங்கு) பொருத்தப்படுதல் வேண்டும் ;

(5) நகர மூலக் குழாய்களிலிருந்து நீர்ச் சேவை அமைக்கப்படுதல் வேண்டும்.

மேற்கண்ட கடைகளின் அமைப்பிலே மேலே சொல்லப்பட்ட தேவைகள் அமைந்துள்ளன.

வெற்றியுறுங் கேள்வியாளர் தமது பொறுப்பிலும் செலவிலும் பின்வரும் தேவைகளைக் கடைப்பிடிக்கக் கடவர் :—

(1) சுவர்கள் 6 அடி உயரத்துக்கு மெருகோடு (வெள்ளை) இடப்படுதல் வேண்டும் ;

(2) கழிவுக் குழிக்குக் கழிவுநீர் வடிந்தோடச் செய்தல் வேண்டும் ;

(3) வயிர மரக்குத்தியிலே இறைச்சி துண்டாடப்படுதல் வேண்டும் ;

(4) வேலையாட்கள், கை, கால், கழுவுவதற்கு ஏற்ற வசதியளித்தல் வேண்டும் ;

(5) கழிவுகள் போடத் தகரம் மூடியுடன் வைக்கப்படுதல் வேண்டும் ;

(6) மேசைக்கு உட் செலவிடா மேற்பக்கம் இருத்தல் வேண்டும் ;

(7) ஊன் விலைஞர் உத்தரவுச் சீட்டு அவசியம் ;

(8) ஊன்விலைஞருக்கான திருத்திய அதிகாரச் சட்டம் நடைமுறைகளை விளக்கும் ;

1960 ம் ஆண்டு யூலை மாதம் 20ம் திகதிக்கு முன்னர் கடை நடைபெறத் தயாராகுதல் வேண்டும்.

வீட்மைப்பு அதிகாரியின் தேவைகளுக்கும் கொழும்பு மாநகர சங்கத்தின் தேவைகளுக்கும் எவையாவது உண்டானால் அமைய வெற்றியுறுங் கேள்வியாளர் தமது பொறுப்பிலும் செலவிலும் கடையிடத்திற்குக் காற்றுச் சீராக்கும் அமைப்பினை அமைக்கக்கடவர்.

கடைநிலத்திலும் சுவரிலும் மெருகோடு அமைத்தல் வேண்டும். பிற பொருளமைப்பதாயின் வீடமைப்பு அதிகாரி அல்லது உள்ளூர் அதிகாரியின் அங்கீகாரம் பெற வேண்டும்.

வீடமைப்பதிகாரியினாலும் உள்ளூர் அதிகாரியினாலும் அல்லது இருவருள் ஒருவரினால் வேண்டப்படும் முறையில் கடையிடத்தில் ஈ வராது தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

சுத்தமும் தகுந்த சுகாதார நிலைமைகளும் உறுதியாகும் பொருட்டு வீடமைப்பு அதிகாரியினாலும் உள்ளூர் அதிகாரியினாலும் அல்லது இருவருள் ஒருவரினால் விதிக்கப்படும் பிரகாரம் கடை வேலையாளர் யாவரும் உடையும் தலையணியும் அணியக்கடவர். ஊத்தைப் பொருட்களையும், கழிவுப் பொருட்களையும் தகுந்த முறையில் போட்டுவைத்துப் போக்குதல் செய்ய வெற்றியுறுங் கேள்வியாளர் உள்ளூர் அதிகாரி ஏவுமாறு எல்லா முற்காப்புகளையும் கவனித்துக்கொள்ளக்கடவர்.

கடையின் மாதாந்த வாடகை ரூபா 350 ஆகும். விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் மூன்று மாத வாடகையை முற்பணமாகக் கட்டல் வேண்டும். அத்துடன் ஒவ்வொருவரும் கட்டுப்பணமாகக் கொடுக்கக் கூடிய உச்சத்தொகையை வீடமைப்பு அதிகாரிக்குக் குறித்துக் காட்டுதல் வேண்டும்.

வெற்றியுறுங் கேள்வியாளர் கட்டும் கட்டுப்பணம் (பிறிமியம்) திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

காரணமெதுவுங் காட்டாமல், எந்தக் கேள்விப்பத்திரத்தையும் தள்ளுபடிசெய்யும் உரிமை வீடமைப்பு அதிகாரிக்கு உண்டு. அவரது தீர்ப்பு இறுதியானது.

1960 ம் ஆண்டு யூன் மாதம் 29 ந் தேதி, காலை 10 மணிக்குமுன் தேசிய வீடமைப்பு அதிகாரிக்குக் கிடைக்க மெழுகு முத்திரையிட்ட உறைகளில் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படுதல் வேண்டும்.

இலங்கைப் பிரஜைகளிடமிருந்துவரும் கேள்விப் பத்திரங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆர். எல். ஆறேல்டா,
தேசிய வீடமைப்பு அதிகாரி.

கொழும்பு.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது